# சைதை துரைசாமியின்
# மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்

**28, முதல் பிரதான சாலை, சி.ஐ.டி.நகர், சென்னை-600035.**

**போன்: 044-2435 8373, 98401 06162**

**Email: manidhanaeyam@gmail.com Website: www.saidais.com**


---

## தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி-Iக்கான முதல் நிலைத்தேர்வுக்கு மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம் நடத்தும் பயிற்சிக்கு 25.11.2016 முதல் விண்ணப்பிக்கலாம்

திரு.சைதை துரைசாமி, திருமதி மல்லிகா துரைசாமி, திரு.வெற்றி துரைசாமி மற்றும் திருமதி வசுந்தரா வெற்றி ஆகியோரால் சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு கடந்த 2005ஆம் ஆண்டு **“மனிதநேய அறக்கட்டளை”** தொடங்கப்பட்டு, மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமுதாயப் பணிகள் இந்த அறக்கட்டளையின் மூலமாக செய்யப்பட்டு வருகின்றது.

**“சைதை துரைசாமியின் மனிதநேயம் ஐஏஎஸ் கட்டணமில்லா கல்வியகம்”** மூலம், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மாணவ-மாணவியர்களும் இந்திய அளவில் உயர்பதவிகளான ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவற்றிற்கு தேர்வு செய்யப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு கடந்த பத்து ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ், ஐ.ஆர்.எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப் -I, II (DC, DSP, DRO, DEO, CTO), சிவில் நீதிபதி பதவிகளுக்கும், SUB-INSPECTOR, A.E(HIGHWAYS, RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ, PWD (CIVIL,ELECTRICAL)) போன்ற பதவிகளுக்கும் இதுவரை **2831** க்கும் மேற்பட்ட மாணவ – மாணவியர்கள் வெற்றி பெற்று மாநில மற்றும் தேசிய அளவிலும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி-I முதல்நிலை எழுத்துத்தேர்வுக்கு சைதை துரைசாமியின் மனிதநேய கட்டணமில்லா ஐ.ஏ.எஸ்.கல்வியகம் திறம்பட பயிற்சி அளிக்கவுள்ளது. இத்தேர்வு எழுதவுள்ள மாணவ மாணவியர் அனைவரும் கட்டணமில்லா பயிற்சி பெற www.saidais.com என்ற மனிதநேய இணையதளத்தில் Register for TNPSC Gr.I prelim.Exam 2016 என்ற இணைப்பில் 25.11.2016 முதல் பதிவு செய்து கொள்ளவும்.**

பதிவு செய்து கொள்ளும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும், தேர்வுகள், வகுப்புகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட உள்ளன என இம்மையத்தின் மாநில தேர்வுகள் ஒருங்கிணைப்பாளர் திரு.சாம் ராஜேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.